## இயல் 1 - தமிழ்த்தேன்

### பாடம் 1: இன்பத்தமிழ்

**1)** கண்ணே! மணியே! என்று குழந்தையைக் கொஞ்சுவது போல நம் செந்தமிழுக்குப் பெயர்கள் பல சூட்டி மகிழ்கின்றவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன் C) சுரதா D) இரா.பி.சேது

- "தமிழுக்கும் அமுதென்றுபேர்! அந்தத் தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!" - என்று பாடியவர் யார்? பாரதிதாசன்

**2)** நிருமித்த - என்ற சொல்லின் பொருள் என்ன?

A) நிர்வகித்த B) நிர்மூலமாக்கிய C) உருவாக்கிய D) நிரூபித்த

- சமூகம் - மக்கள் குழு
- விளைவு - வளர்ச்சி
- அசதி - சோர்வு

**3)** பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?

A) சுப்பையா B) ராஜகோபாலன்
C) சுப்புரத்தினம் D) ராஜமார்த்தாண்டம்

**4)** பின்வருவனவற்றுள் பாரதிதாசனார் பாடியுள்ள கருத்துகளில் சேராதது எது?

A) பெண்கல்வி, கைம்பெண் மறுமணம் B) பொதுவுடைமை
C) பகுத்தறிவு D) இறைவழிபாடு

**5)** பாரதிதாசன் எவ்வாறு போற்றப்படுகிறார்?

A) புரட்சிக்கவி & பாவேந்தர் B) உவமைக்கவி & தேசியக்கவி
C) காந்தியக்கவி & சண்மார்க்க கவி D) சிந்துக்குத் தந்தை & சந்தக்கவி

**6)** தமிழ் எங்கள் இளமைக்கு ____ என்று பாரதிதாசன் பாடுகிறார்.

A) தோள் B) வான் C) வேல் D) பால்

- தமிழ் எங்கள் உயர்வுக்கு _____ என்று பாரதிதாசன் பாடுகிறார். (வான்)
- தமிழ் எங்கள் அறிவுக்கு _____ என்று பாரதிதாசன் பாடுகிறார். (தோள்)

**7)** இன்பத்தமிழ் - பாடலின் கருத்துக்கு ஏற்றபடி பொருத்துக:

| | | |
|---|---|---|
| (i) கவிதைக்கு | - | 1. வேல் |
| (ii) அசதிக்கு | - | 2. தேன் |
| (iii) புகழுக்கு | - | 3. வாள் |
| (iv) வாழ்வுக்கு | - | 4. நீர் |
| (v) வளர்ச்சி | - | 5. ஊர் |

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 | 5 |
| B) | 2 | 3 | 4 | 5 | 1 |
| C) | 2 | 1 | 3 | 5 | 4 |
| **D)** | **3** | **2** | **1** | **5** | **4** |

**8)** ஏற்றத் தாழ்வற்ற ------ அமைய வேண்டும்

A) சமூகம் B) நாடு C) வீடு D) தெரு

**9)** நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ------ ஆக இருக்கும்

A) மகிழ்ச்சி B) கோபம் C) வருத்தம் D) அசதி

**10)** நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் --------

A) நிலயென்று B) நிலவென்று C) நிலவன்று D) நிலவுஎன்று

1)B 2)C 3)C 4)D 5)A 6)D 7)D 8)A 9)D 10)B

ETW ACADEMY

## பாடம் 2: தமிழ்க்கும்மி

**11)** தமிழ்க்கும்மி என்ற பாடலின் ஆசிரியர் யார்?

A) பெருஞ்சித்திரனார் B) தமிழழகனார் C) தமிழன்பனார் D) சுரதா

**12)** பொருத்துக:

(i) ஆழிப் பெருக்கு – 1. கடல் கோள்
(ii) மேதினி - 2. உலகம்
(iii) ஊழி - 3. நீண்டதொரு காலப்பகுதி
(iv) உள்ளப்பூட்டு - 4. உள்ளத்தின் அறியாமை

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1 |

**13)** தமிழின் புகழ் எத்தனை திசைகளிலும் பரவிடும் வகையில் கைகளைக் கொட்டிக் கும்மியடிப்போம் என்று பெருஞ்சித்திரனார் பாடுகிறார்?

A) ஏழு B) ஆறு C) நான்கு D) எட்டு

**14)** பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் என்ன?

A) அரங்கசாமி (எ) எத்திராசலு B) ராஜகோபாலன்
C) துரை.மாணிக்கம் D) வே.சண்முகசுந்தரம்

**15)** பெருஞ்சித்திரனாரின் சிறப்புப்பெயர் என்ன?

A) கவிஞரேறு B) பாவலரேறு C) புலவரேறு D) மொழிஞாயிறு

**16)** கனிச்சாறு என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) சுப்புரத்தின தாசன் B) வாணிதாசன்
C) பாவலரேறு பெருஞ்சித்திரனார் D) தேவநேயப் பாவாணர்

**17)** பின்வனவற்றுள் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் நூல் அல்லாதது எது?

A) தமிழின்பம் B) கொய்யாக்கனி C) பாவியக்கொத்து D) நூறாசிரியம்

**18)** பெருஞ்சித்தினார் நடத்திய இதழ் எது?

A) தென்மொழி B) தமிழ்ச்சிட்டு
C) தமிழ்நிலம் D) மேற்கண்ட அனைத்தும்

- தனித்தமிழையும் தமிழுணர்வையும் பரப்பிய பாவலர் - பெருஞ்சித்தினார்

**19)** தமிழ்கும்மி என்ற பாடல் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A) கனிச்சாறு B) கொய்யாக்கனி C) பாவியக்கொத்து D) நூறாசிரியம்

**20)** கனிச்சாறு எத்தனை தொகுதிகளாக வெளிவந்தது?

A) 6 B) 12 C) 8 D) 10

**21)** கனிச்சாறு ____ நிறைந்த பாடல்களைக் கொண்டது

A) மொழிஉணர்வு B) தமிழ்வுணர்வு
C) நாட்டுப்பற்று D) சகோதரத்துவம்

11)A 12)C 13)D 14)C 15)B 16)C 17)A 18)D 19)A 20)C 21)B

ETW ACADEMY

புத்தக பின்பக்க வினாக்கள்

**22)** தாய் மொழியில் படித்தால் _____ அடையலாம்

A) பன்மை B) மேன்மை C) பொறுமை D) சிறுமை

**23)** தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ______ சுருங்கிவிட்டது

A) மேதினி B) நிலா C) வானம் D) காற்று

**24)** 'செந்தமிழ்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

A) செந் + தமிழ் B) செம் + தமிழ்

C) சென்மை + தமிழ் D) செம்மை + தமிழ்

**25)** 'பொய்யகற்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

A) பொய் + அகற்றும் B) பொய் + கற்றும்

C) பொய்ய + கற்றும் D) பொய் + யகற்றும்

**26)** பாட்டு+ இருக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

A) பாட்டிருக்கும் B) பாட்டுருக்கும்

C) பாடிருக்கும் D) பாடியிருக்கும்

**27)** எட்டு + திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _____

A) எட்டுத்திசை B) எட்டிதிசை

C) எட்டுதிசை D) எட்டிஇசை

பாடம்: வளர்தமிழ்

**28)** உலகில் எத்தனைக்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன?

A) 6000 B) 12000 C) 5000 D) 4500

**29)** யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று வியந்து பாடுபவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன்

C) கண்ணதாசன் D) வீரமாமுனிவர்

**30)** என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய் என்ற தொடரில் பாரதியார் யாருடைய தொன்மையை விதந்தோன்றுகிறார்?

A) தமிழ்த்தாய் B) பாரதத்தாய் C) கண்ணம்மாள் D) செல்லம்மாள்

**31)** தமிழில் நமக்குக் கிடைத்ததிலேயே மிகப் பழமையான இலக்கண நூல் எது?

A) தொல்காப்பியம் B) நன்னூல் C) தண்டியலங்காரம் D) இறையனார் களவியல்

**32)** பின்வருவனவற்றுள் எது முதலில் தோன்றியிருக்க வேண்டும்?

A) இலக்கணம் B) இலக்கியம் C) யாப்பு D) அணி

**33)** தமிழ் எழுத்துக்கள் பெரும்பாலும் எந்த எழுத்துக்களாகவே அமைந்துள்ளன?

A) இடஞ்சுழி எழுத்துக்கள் B) வலஞ்சுழி எழுத்துகள்

C) வட்ட எழுத்துக்கள் D) சித்திர எழுத்துக்கள்

22)B 23)A 24)D 25)A 26)A 27)A 28)A 29)A 30)B 31)A 32)B 33)B

ACADEMY

**34)** தமிழ் என்ற சொல் முதன் முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

A) சிலப்பதிகாரம் B) தேவாரம்

C) திருவாசகம் D) தொல்காப்பியம்

**35)** தமிழ்நாடு என்ற சொல் முதன் முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

A) தொல்காப்பியம் B) தேவாரம் C) திருக்குறள் D) சிலப்பதிகாரம்

**36)** தமிழன் என்ற சொல் முதன் முதலில் இடம் பெற்ற நூல் எது?

A) நற்றிணை B) திருவாசகம் C) தேவாரம் D) குறுந்தொகை

- யார் இயற்றிய தேவாரத்தில்? அப்பர் தேவாரம்

**37)** தமிழென் கிளவியும் அதனோ ரற்றே என்ற தொடர் இடம்பறும் நூல் எது?

A) தேவாரம் B) தொல்காப்பியம்

C) சிலப்பதிகாரம் D) தண்டியலங்காரம்

**38)** இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இதுநீ கருதினை ஆயின் என்ற சிலப்பதிகார பாடல் எந்த காண்டத்தில் இடம் பெற்றுள்ளது?

A) புகார்காண்டம் B) வஞ்சிக்காண்டம்

C) மதுரைக்காண்டம் D) மேற்கண்ட எதுவுமில்லை

**39)** தமிழன் கண்டாய் என்ற தொடர் அப்பர் தேவாரத்தில் எந்த தாண்டகத்தில் இடம்பெற்றுள்ளது?

A) திருத்தாண்டகம் B) திருநெடுந்தாண்டகம்

C) திருக்குறுந்தாண்டகம் D) சிறுந்தாண்டகம்

**40)** அஃறிணை என்பதன் பொருள் என்ன?

A) தாழ்திணை B) கீழ்த்திணை

C) உயர்வு அல்லாத திணை D) மேற்கண்ட அனைத்தும்

- அஃறிணை = அல்+திணை
- பாகற்காய் என்பதன் பொருள் என்ன? இனிப்பு அல்லாத காய்
- பாகற்காய் = பாகு+அல்+காய்

**41)** தமிழ் மொழி?

A) சீர்மை மொழி & புதுமை மொழி B) வளமை மொழி

C) வளர்மொழி & அறிவியல் மொழி D) மேற்கண்ட அனைத்தும்

**42)** மரம், விலங்கு, திருமகள், அழகு, அறிவு போன்ற பொருட்களை தரும் ஓரெழுத்து ஒரு மொழி எது?

A) கெள B) பே C) மா D) கை

- மேலும் சில பொருள்கள்: பெரிய, அளவு, அழைத்தல், புகழ், மேன்மை, வயல், வண்டு

**43)** பொருத்துக

(i) இயல் தமிழ் - 1. உள்ளத்தை மகிழ்விப்பது

(ii) இசைத்தமிழ் - 2. உணர்வில் கலந்து வாழ்வின் நிறை குறைகளை சுட்டிக் காட்டுவது

(iii) நாடகத் தமிழ் - 3. எண்ணத்தை வெளிப்படுத்துவது

| | (i) | (ii) | (iii) |
|---|---|---|---|
| **A)** | **3** | **1** | **2** |
| B) | 2 | 3 | 1 |
| C) | 2 | 1 | 3 |
| D) | 3 | 2 | 1 |

34)D 35)D 36)C 37)B 38)B 39)A 40)C 41)D 42)C 43)A

- தமிழின் சிறப்பு பெயர் என்ன? முத்தமிழ்

**44)** பின்வருவனவற்றுள் எது தமிழின் கவிதை வடிவங்களில் ஒன்றாகும்?

A) களிப்பா B) யாளிப்பா C) பொளிப்பா D) துளிப்பா

**45)** நெல், வரகு ஆகியவற்றின் இலை பெயர் எது?

A) மடல் B) தாள் C) தோகை D) கூந்தல்

- சப்பாத்திக்கள்ளி தாழை ஆகியவற்றின் இலை பெயர் எது? மடல்
- கமுகு (பாக்கு) என்பதன் இலை பெயர்: கூந்தல்

| தாவர இலைப் பெயர்கள் | |
|---|---|
| ஆல், அரசு, மா, பலா, வாழை | இலை |
| அகத்தி, பசலை, முருங்கை | கீரை |
| அருகு, கோரை | புல் |
| நெல், வரகு | தாள் |

| | |
|---|---|
| மல்லி | தழை |
| சப்பாத்திக் கள்ளி, தாழை | மடல் |
| கரும்பு, நாணல் | தோகை |
| பனை, தென்னை | ஓலை |
| கமுகு (பாக்கு) | கூந்தல் |

**46)** புலனம் என்ற தமிழ்ச் சொல் குறிப்பது எதை?

A) ஃபேஸ்புக் B) ஆர்கூட்

C) வாட்ஸ்அப் D) கூகுள் ப்ளஸ்

**47)** மொழியை கணினியில் பயன்படுத்த வேண்டும் என்றால் அது எதன் அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்?

A) புள்ளிகளின் அடிப்படையில் B) எண்களின் அடிப்படையில்

C) கோடுகளின் அடிப்படையில் D) முத்திரைகளின் அடிப்படையில்

**48)** வேளாண்மை என்ற சொல் இடம் பெற்ற நூல்கள் எவை?

A) நற்றிணை & பதிற்றுப்பத்து B) மதுரைக்காஞ்சி & நெடுநல்வாடை

C) தொல்காப்பியம் & நன்னூல் D) கலித்தொகை மற்றும் திருக்குறள்

**49)** 'தொன்மை' என்னும் சொ ல்லின் பொருள் _________

A) புதுமை B) பழமை C) பெருமை D) சீர்மை

**50)** 'இடப்புறம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

A) இடன் + புறம் B) இடது + புறம்

C) இடம் + புறம் D) இடப் + புறம்

**51)** 'சீரிளமை ' என்னும் சொல்லை ப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

A) சீர் + இளமை B) சீர்மை + இளமை

C) சீரி + இளமை D) சீற் + இளமை

**52)** சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொ ல் _______

A) சிலம்பதிகாரம் B) சிலப்பதிகாரம்

C) சிலம்புதிகாரம் D) சிலபதிகாரம்

**53)** கணினி + தமிழ் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொ ல் _______

A) கணினிதமிழ் B) கணினித்தமிழ்

C) கணிணிதமிழ் D) கனினிதமிழ்

44)D 45)B 46)C 47)B 48)D 49)B 50)B 51)B 52)B 53)B

**54)** “தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று பாடியவர் ______

A) கண்ணதாசன் B) பாரதியார்
C) பாரதிதாசன் D) வாணிதாசன்

**55)** 'மா' என்னும் சொல்லின் பொருள் ______

A) மாடம் B) வானம் C) விலங்கு D) அம்மா

கோடிட்ட இடத்தை நிரப்புக.

- நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ______ (மொழி)
- தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல்______ (தொல்காப்பியம்)
- மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது ______ அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும். (எண்கள்)

பாடம்: கனவு பலித்தது

**56)** உலக உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை வகைப்படுத்தியவர்?

A) திருவள்ளுவர் B) தொல்காப்பியர் C) ஔவையார் D) பவணந்தி முனிவர்

**57)** நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐந்தும் கலந்தது இவ்வுலகம் என்ற அறிவியல் உண்மையை குறிப்பிடும் முதல் தமிழ் நூல் எது?

A) தொல்காப்பியம் B) திருக்குறள்
C) பரிபாடல் D) மேற்கண்ட அனைத்தும்

- அந்தப் பாடல்: நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்

**58)** கடல் நீரானது ஆவியாகி, மேகமாகி, பின்னர் மேகம் குளிர்ந்து, மழையாய் பொழியும் என்ற அறிவியல் செய்தி பின்வரும் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

A) முல்லைப்பாட்டு & பரிபாடல் B) திருக்குறள் & கார்நாற்பது
C) திருப்பாவை D) மேற்கண்ட அனைத்தும்

**59)** திரவப் பொருட்களை எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவை சுருக்க முடியாது என்ற அறிவியல் கருத்து யாருடைய பாடலில் கூறப்பட்டுள்ளது?

A) தொல்காப்பியர் B) கபிலர் C) நக்கீரர் D) அவ்வையார்

- அந்தப் பாடல்: ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர் நாழி முகவாது நால்நாழி

**60)** கடல் நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) நற்றிணை B) பரிபாடல் C) கார் நாற்பது D) திருப்பாவை

**61)** வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

A) பதிற்றுப்பத்து B) பரிபாடல் C) குறுந்தொகை D) அகநானூறு

- அந்தப் பாடல்: நெடு வெள்ளூசி நெடு வசி பரந்த வடு

**62)** சுறா மீன் தாக்கியதால் ஏற்பட்ட புண்ணை நரம்பினால் தைத்த செய்தி எந்த நூலில் காணப்படுகிறது?

A) குறுந்தொகை B) நற்றிணை C) பதிற்றுப்பத்து D) சிலப்பதிகாரம்

- அந்தப் பாடல்: கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய நரம்பின் முடி முதிர் பரதவர்

54)B 55)C 56)B 57)A 58)D 59)D 60)C 61)A 62)B

**63)** தொலைவில் உள்ள பொருளின் உருவத்தை அருகில் தோன்றச் செய்ய முடியும் என்ற கருத்து பின்வரும் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

A) திருமுருகாற்றுப்படை B) மதுரைக்காஞ்சி

C) திருவள்ளுவமாலை D) சிறுபாணாற்றுப்படை

**64)** தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட பனையளவு காட்டும் - என்ற திருவள்ளுவமாலை பாடலை இயற்றியவர் யார்?

A) நக்கீரர் B) மோசிகீரனார்

C) சாத்தன் D) கபிலர்

**65)** பின் வருபவர்களில் தமிழில் பயின்ற அறிவியல் அறிஞர் யார்?

A) டாக்டர்.அப்துல் கலாம் B) டாக்டர்.மயில்சாமி அண்ணாதுரை

C) டாக்டர்.கை.சிவன் D) மேற்கண்ட அனைவரும்

## பாடம்: தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்

**66)** ஒரு மொழியை எவ்வாறு பேசவும் எழுதவும் வேண்டும் என்ற வரையறைகள் _____ எனப்படும்?

A) இலக்கணம் B) இலக்கியம்

C) யாப்பு D) மொழிக்கட்டு

**67)** தமிழ்மொழியின் இலக்கண வகைகள் எத்தனை?

A) 2 B) 3 C) 4 D) 5

- எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம்

**68)** எழுத்து என்பது?

A) ஒலி வடிவமாக எழுதப்படுவது B) வரிவடிவமாக எழுதப்படுவது

C) A & B D) மேற்கண்ட எதுவுமில்லை

**69)** வாயிலிருந்து இயல்பாகக் காற்று வெளிப்படும் போது பிறக்கும் எழுத்துக்கள் எவை?

A) உயிர் எழுத்துக்கள் B) மெய்யெழுத்துக்கள்

C) உயிர்மெய் எழுத்துக்கள் D) ஆய்த எழுத்து

**70)** பின்வரும் எந்த செயல்பாட்டின் போது அ முதல் ஔ வரையுள்ள 12 உயிரெழுத்துகளும் பிறக்கின்றன?

A) வாயைத் திறத்தல் B) உதடுகளை விரித்தல்

C) உதடுகளை குவித்தல் D) மேற்கண்ட அனைத்தும்

- உயிரெழுத்துகளில் குறில் எழுத்துக்கள் 5, நெடில் எழுத்துக்கள் 7

**71)** ஒரு முறை கண் இமைக்கவோ அல்லது ஒரு முறை கைநொடிக்கவோ ஆகும் கால அளவு எவ்வளவு?

A) அரை மாத்திரை B) ஒரு மாத்திரை

C) இரண்டு மாத்திரை D) ஒன்றரை மாத்திரை

- மாத்திரை என்பது எதைக் குறிக்கிறது? கால அளவு
- குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு எவ்வளவு? 1 மாத்திரை
- நெடில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு இரண்டு மாத்திரைகள்

63)C 64)D 65)D 66)A 67)D 68)C 69)A 70)D 71)B

**72)** பின்வரும் எந்த எழுத்துக்களை ஒலிக்க உடல் இயக்கத்தின் பங்கு இன்றியமையாதது ஆகும்?

A) உயிரெழுத்துக்கள் B) மெய்யெழுத்துக்கள்

C) A & B D) ஏதுமில்லை

**73)** மெய் எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவு எவ்வளவு?

A) அரை மாத்திரை B) ஒரு மாத்திரை

C) இரண்டு மாத்திரை D) ஒன்றரை மாத்திரை

**74)** ஆய்த எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவு எவ்வளவு?

A) அரை மாத்திரை B) ஒரு மாத்திரை

C) இரண்டு மாத்திரை D) ஒன்றரை மாத்திரை

- உயிர் மெய் எழுத்துக்களின் வகைகள்: உயிர் மெய் குறில் உயிர் மெய் நெடில்

**75)** பழமொழியின் சிறப்பு என்ன?

A) விரிவாகச் சொல்வது B) சுருங்கச் சொல்வது

C) பழமையைச் சொல்வது D) B & C

****

ALL THE BEST

ETW ACAD

72)B 73)A 74)A 75)B